1991 செப்டம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினா மிக இன்றியமையாத ஒன்றாகும். இதுபற்றித் தனித் தீர்மானமே ஒன்று அவையில் விவாதிக்கப்பட வேண்டும் என்று என்னிடத்தில் ஒரு குறிப்புரை இருக்கிறது. அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. எனவே இதிலே அதிகமாக எல்லா உறுப்பினர் களுமே கேள்வி கேட்க விரும்புவார்கள். எனவே அந்தத் தனித் தீர்மானம் எடுக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி எடுக்கின்றபோது அதிலே விரிவாகப் பேசலாம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா எண். 50.—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

விவசாயிகள் மின் கட்டணம்

50—

*996. திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு வசூலிக்கப்படும் மின் கட்டணத்தை குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அனைத்து விவசாயிகளுக்கும் நம்முடைய அரசு மின்சாரம் இலவசமாக வழங்கிக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே இந்தக் கேள்விக்கு இடமே இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு மேல் அடுத்த கேள்வி கேட்க எனக்கு மனம் இல்லை என்றாலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கே இடம் இல்லை என்று சொன்னதற்குப் பிறகும்......

திரு. ஆர். சிங்காரம் : விவசாயிகள் 1986லிருந்து இன்று வரை ஆயிரக்கணக்கானவர்கள் ஒரு கம்பம் நட்டு மின் இணைப்பு கேட்பதற்காக சீனியாரிட்டியிலே காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்டவரே சம்பந்தம் இல்லாத துணைக் கேள்விகளைக் கேட்கக் கூடாது.

திரு. ஆர். சிங்காரம் : சம்பந்தம் உள்ளது தான். ஆகவே அப்படிப்பட்ட அந்த சீனியாரிட்டியை ஓவர்லுக் செய்தும் சிங்கிள் போஸ்ட் இன்றுவரை இருக்கின்ற அனைவருக்கும் கனக்ஷன் கொடுப்பதற்கான முயற்சியை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின் கட்டணத்திலே துணைக் கேள்வி இருக்கிறதா ?

திரு. ஆர். சிங்காரம் : அது சம்பந்தப்பட்டதுதான்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய் பம்புசெட்டுகளுக்கு வசூலிக்கப்படுகின்ற மின் கட்டணம் குறைக்கப்படுமா என்ற வினாவுக்கு விவசாயிகள் மத்தியில் ஒரு ஐயப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு ஏதாவது ஒரு கட்டணத்தை விதிக்கவேண்டும் என்பதைப் போன்ற ஒரு தகவல் இருக்கிறது. 550 கோடி ரூபாய் மின்சார வாரியத்தில் இழப்பு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதால் வருகிறது என்ற ஒரு குறிப்பு இருப்பதை வைத்துக்கொண்டு விவசாயப் பெருமக்கள் மத்தியில் அறிவிக்கப்பட்ட இந்த இலவச மின்சார சலுகை பறிபோய்விடுமோ என்ற ஒரு அச்ச உணர்வு தமிழகம் முழுவதும் இருக்கின்ற விவசாய பெருமக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த விவசாய பெருமக்கள் இப்போது ஏர் கம்ப்ரசர் என்ற புதிய முறையிலே பாசனம் செய்து கொண்டு இருப்பதால் இன்றைக்கு விடிய விடிய மோட்டாரை ஓட்டி குறைந்த தண்ணீர் வந்து நிரம்ப வேண்டியிருக்கிறது. அப்படி கட்டணம் விதிக்கின்ற போது அந்த விவசாயம் செய்வதே கட்டுப்படி ஆகாமல் போய்விடுமோ என்ற ஒரு அச்சம் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலவச மின்சாரம் தான் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலும் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்ற வேண்டுகோளைச் சொல்லி அதை நீட்டிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்விக்கும் இங்கே கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட, தற்போது விவசாயிகளுக்கு கொடுக்கின்ற மின்சாரத்தி னுடைய கட்டணத்தை குறைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது தான் கேள்வி. நான் ஏற்கனவே சொன்னது போல் நம்முடைய அரசு ஏற்கனவே 545 கோடி ரூபாய் செலவு செய்து 4,040 மில்லியன் யூனிட் அளவுக்கு இன்றைக்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, மற்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் கேட்க விரும்பினால் அதற்கென்று தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 51. திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை.

51—

* 127.— திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 1990—ஆம் ஆண்டில் விவசாயிகள் அனுப்பிய கரும்பிற்கான தொகை இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு கடந்த ஆண்டிலே 4.12 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய பணத்தை நிறுத்தி வைத்து இருந்தார்கள். ஆனால் வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொல்லக்கூடிய வள்ளலா ருடைய வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே அந்த விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டிய பணத்தை வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். அதன் விளைவாக 13— 7— 1991க்குள் முழுத் தொகையும் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.